

கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 73வது பிறந்தநாளையொட்டி திருவள்ளூர் மத்திய மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அணிய சார்பில் ஆவடி பட்டாபிராமில் அமைந்துள்ள ஆர்.கே.மனநல காப்பகத்தில் உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது இதில் மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பங்கேற்று உணவு வழங்கினார். உடன் ஆவடி மாநகர மேற்கு பகுதி செயலாளர் பொன். விஜயன், மாநில சிறுபான்மையினர் நலன் உரிமை பிரிவு இணை செயலாளர் சி.ஜெரால்டு, சிறுபான்மையினர் நலன் உரிமை பிரிவு அணி அமைப்பாளர் க.ஷாஜகான், வட்டச் செயலாளர் தாஸ், துணை அமைப்பாளர்கள் வழக்கறிஞர் அர்னால்ட், மேகநாதன், லாசர், டாக்டர் மீரான், அசார், பாரூக், இம்ரான் உசேன், ஜவகர் துணைத் தலைவர் ஜஸ்டின், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### என்.இ.கே.மூர்த்தி தலைமை! முதல்வர் பிறந்த நாள் விழா!

# திருவேற்காடு நகரத்தில் - 8 வார்டுகளில் 1000 நபர்களுக்கு பல்வேறு நல உதவிகள்!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வழங்கினார் !

திருவள்ளூர், மார்ச் 09-

கழக தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு திருவேற்காட்டில் ஆவடி சா.மு.நாசர் ஆயிரம் மகளிருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு திருவள்ளூர் மத்திய மாவட்ட திருவேற்காடு நகரம் திமுக சார்பில் 8 வார்டில் நகர செயலாளரும், நகர் மன்ற தலைவருமான என்.இ.கே.மூர்த்தி தலைமையில் வட நூம்பல் பகுதியில் நடைபெற்றது விழாவில் மாவட்ட செயலாளரும், அமைச்சருமான ஆவடி சா.மு.நாசர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு ஆயிரம் மகளிருக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

அப்போது அமைச்சர் பேசியதாவது:

இந்த ஆட்சியில் நம் திராவிட மாடல் முதலமைச்சர் சொன்னதையும், சொல்லாததையும் செய்துள்ளார். மகளிர் உரிமைத் தொகையை நிறுத்துவதற்கு சதி திட்டம் தீட்டினார்கள். ஆனால் அதை முறியடித்து 3 மாத மகளிர் உரிமைத்தொகை மற்றும் கோடைகால ஊக்கத்தொகை என ரூ. 5 ஆயிரம் வழங்கினார்.

இந்த ஆட்சியில் பெண்களுக்காக ஏராளமான திட்டங்கள் செயல் படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டு பெண்கள் ஒவ்வொருவரையும் தனது சகோதரியாக நினைத்து முதலமைச்சர் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். மக்களுக்கான நல்ல திட்டங்கள் தொடர்வதற்கு அவருக்கு வரும் தேர்தலில் ஆதரவு கொடுத்து மீண்டும் முதலமைச்சராக வேண்டும். அனைவருக்கும் இனிய மகளிர் தின நல்வாழ்த்துக்கள். என்றார் அவர்.

பின்னர் கேக் வெட்டி மகளிர் தினத்தை கொண்டாடினர்.

இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் நடுக்குத்தகை கே.ஜெ.ரமேஷ், மாநில இளைஞரணி துணை செயலாளர் பிரபு கஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர் எஸ். சங்கர், நகர நிர்வாகிகள் ஜோதிநாதன், குமாரசாமி, நடராஜன், என்.ராஜி வார்டு செயலாளர்கள் ரங்கதுரை, தெய்வசிகாமணி, பரிசமுத்து, சாது, பி.உமாபதி, பொன் மனோகரன், ஜெஜா, கே.பி.எஸ்.சுதாகர், இளங்கோவன், பி.வி.கே.கண்ணன், பன்னீர்செல்வம், சத்யகிரி, ஜெகன், அப்பு என்ற ஜெபராஜ், ஆசைத்தம்பி, நாராயணன், நரேஷ், குடியரசு, ஜான், ரஜினி, இம்மானுவேல், தினேஷ் பாபு சிவராமகிருஷ்ணன், கணேஷ், ராஜேஷ், சொக்கலிங்கம் ராஜேஷ், கோகுல் வெங்கட், தினகர், சத்யா, மகளிர் அணி நிர்வாகிகள் பேபிஸ்ரீ, அமலேஸ்வரி, தங்கம், செல்வி, லதா, கெஜலட்சுமி, ஹேமாவதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### எழும்பூர் தொகுதி, சேத்துப்பட்டு: பொதுமக்களின் பாதுகாப்புக்கு

# 4 இலட்சம் ரூபாய் மதிப்பில் 45 கண்காணிப்பு கேமராக்கள்!

## இ.பரந்தாமன் எம்.எல்.ஏ., நிறுவி இயக்கி வைத்தார்!



சென்னை, மார்ச்.9-

கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், வார்டு எண்.108, சேத்துப்பட்டுப் பகுதியில் பொதுமக்களின் பாதுகாப்புக்காகத் தனது ஏற்பாட்டில் 4 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் 45 கண்காணிப்பு கேமராக்களை நிறுவி, அவற்றை இயக்கி வைத்தார்.

எழும்பூர் தொகுதி, வார்டு எண்.108, சேத்துப்பட்டு பகுதியிலுள்ள ஜெகந்நாதபுரம், மங்களபுரம், பிருந்தாவனம் தெரு உள்ளிட்ட இடங்களில் வசித்து வரும் பொதுமக்கள், தமது சுற்றுவட்டாரப் பகுதிகளில் கண்காணிப்பு கேமராக்களை நிறுவித் தர வேண்டுமெனச் சட்டமன்ற உறுப்பினரிடம் கோரிக்கை வைத்தனர்.

அவர்களது கோரிக்கையை நிறைவேற்றும் விதமாக, சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், தனது ஏற்பாட்டில் செல்வ விநாயகர் கோவில்-ஜெகந்நாதபுரம் 1-வது தெரு சந்திப்பு, ஜெகந்நாதபுரம் 2-வது தெரு-பம்பிங் ஸ்டேஷன் சாலை சந்திப்பு, ஜெகந்நாதபுரம் 3-வது தெரு-பள்ளிக்கூடச் சாலை சந்திப்பு, சீனி ஆடியோ அருகிலுள்ள சந்திப்பு, மங்களபுரம் 1-வது தெரு-பூங்கா அருகிலுள்ள சந்திப்பு, மீன் மார்க்கெட்-பிருந்தாவனம் 4-வது தெரு சந்திப்பு, தனம்மாள் தெரு-மாணிக்கவாசகர் தெரு சந்திப்பு, பள்ளிக்கூடச் சாலை-நியூ காலனி சந்திப்பு, ஜெகந்நாதபுரம் 1-வது தெரு-ரயில்வே ரோடு சந்திப்பு, கிளப் ரோடு-எஸ்.எம். சாலை சந்திப்பு, மேயர் சிட்டிபாபு சாலை-வீ.ஆர்.ஆர். சாலை சந்திப்பு, டாக்டர் சந்தோஷம் சாலை-விவேகானந்தன் சாலை சந்திப்பு, கிளப் ரோடு-எஸ்.எம். சாலை சந்திப்பு, டி.வி. ரோடு-வீ.ஆர்.ஆர்.சாலை சந்திப்பு, ஜெகந்நாதபுரம் மின்வாரிய அலுவலகம் சந்திப்பு உள்ளிட்ட 15 தெருக்களின் சந்திப்புகளில் ஒவ்வொரு சந்திப்பிலும் 3 கண்காணிப்பு கேமராக்கள் என 4 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் 45 கண்காணிப்புக் கேமராக்களை நிறுவி, அவற்றை சீனி ஆடியோ சந்திப்பில் நடந்த நிகழ்ச்சியில் இயக்கி வைத்தார்.

இந்நிகழ்வில் அவைத் தலைவர் வெ.மருதன், மாவட்டப் பிரதிநிதி மா.காந்தி, 108-வது வட்டத் துணைச் செயலாளர் கே. சீனிவாசன், எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஜெ.சிலம்பரசன், எல்.சுகுமாறன்; 108 ‘அ’ வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பு.சதிஷ்குமார், 108-வது வட்ட செயற்குழு உறுப்பினர் வீ.பாபு, பகுதிப் பிரதிநிதி முனுசாமி, முன்னாள் அவைத் தலைவர் கி.புஷ்பராஜ், பெரியமேடு சரவணன், எம்.இ.தேவநிதி, எட்டு (எ) விஜயகுமார், பாக முகவர் கவிதா, 108 ‘அ’ வட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் ஸ்ரீதர், சூர்யா; 77-வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சதீஷ், 78 ‘அ’ வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எம்.இ.மகேஷ்குமார், 99 ‘அ’ வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் குணா மற்றும் கந்தன், சுந்தர்ராஜ், எஸ். கண்ணன், ரோஷன், கபிலன், சத்யகலா உள்ளிட்ட கழக நிர்வாகிகளும், அணிகளின் அமைப்பாளர்களும், கழகச் செயல்வீரர்களும் கலந்துகொண்டனர்.

### படப்பை ஆ.மனோகரன் தலைமை! குன்றத்தூர் தெற்கு ஒன்றிய திமுக தகவல் தொழில்நுட்ப அணி

# ஒருங்கிணைப்பாளர் - படப்பை வ.வீரபாண்டியன் திருவுருவப் படம்!

## அமைச்சர் தா.மோ. அன்பரசன் திறந்து வைத்து அஞ்சலி!



காஞ்சிபுரம், மார்ச் 9

குன்றத்தூர் தெற்கு ஒன்றிய திமுக தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் மறைந்த படப்பை வ.வீரபாண்டியன் அவர்களின் படத்திறப்பு நிகழ்வு 10.3.2026 செவ்வாய் மாலை 5.30 மணியளவில் கீழ்படப்பை துலுக்கானத்தம்மன் கோவில் தெருவில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் படப்பைஆ. மனோகரன் தலைமை வைக்கிறார்.

குன்றத்தூர் ஒன்றிய குழுத் தலைவர் திருமதி. சரஸ்வதி மனோகரன், குன்றத்தூர் தெற்கு ஒன்றிய பொறுப்புக்குழு உறுப்பினர் படப்பை ஊராட்சி மன்ற தலைவர் எஸ்.கர்ணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

அன்னாரது திருவுருவப் படத்தை குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.மோ.அன்பரசன் திறந்து வைத்து அஞ்சலி செலுத்துகிறார்.

இதில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிமாநில தலைவர் திருப்பெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை, குன்றத்தூர் மத்திய ஒன்றிய கழக பொறுப்பாளர் திருமுடிவாக்கம் இ.மணி, குன்றத்தூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.வந்தே மாதரம்,

குன்றத்தூர் ஒன்றிய குழு துணை தலைவர் உமாமகேஸ்வரி வந்தேமாதரம், வ.நந்தகோபால், சி.பார்த்த சாரதி, மூ.ராஜேந்திரன், குமுதாசுமன், டி.லோகநாதன், த.ஏழுமலை, என்.வாசு, க.பா.ஆடலரசு, ஜெ.கோகுல்நாதன், மல்லிகா நடராஜன், ஏ.இ.பஞ்சாட்ச ரம், வினோத் உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்று அஞ்சலி செலுத்துகின்றனர்.



உலக மகளிர் தினத்தையொட்டி தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி தலைமையில் பெண் மாமன்ற உறுப்பினர்களும், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் உதயா கருணாகரன் தலைமையில் மாவட்ட மகளிர் அணி நிர்வாகிகளும் அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்களை நேரில் சந்தித்து மகளிர் தின வாழ்த்துகளை கூறி, அன்பு பரிசு வழங்கி மகிழ்ந்தார்.




சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், அம்பத்தூர் வடக்குப் பகுதியில், மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு ”மனிதநேய விழா35, செந்தமிழ் நாடே முதலிடம்! திராவிட மாடலே நிரந்தரம்! எனும் தலைப்பில், மாபெரும் புகழரங்கம் 07.03.2026, அன்று அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் அம்பத்தூர் வடக்கு பகுதி செயலாளர் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, தலைமையில் மூத்த பத்திரிக்கையாளர் தராசு ஷியாம், மேனாள் குடியரசு தலைவர் அப்துல்கலாம் ஆலோசகர் டாக்டர்.பொன்ராஜ் வெள்ளைச்சாமி, பட்டிமன்ற பேச்சாளர் ராஜா, திரைப்பட இயக்குநர் வி.சி.குகநாதன் ஆகியோர் வாழ்த்துரைத்தனர்.

# திருச்சி - சிறுகனூர் மாநாட்டில் பெருந்திரளாகப் பங்கேற்போம்!

## திருவாரூர் மாவட்டச் செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ. அறிக்கை!



திருவாரூர்,மார்ச் 9 -

திருச்சியில் தமிழ்நாடு முதல்வர் ,திராவிட நாயகர் கழக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 2026 மீண்டும் கழக ஆட்சி என்பதற்கான முன்னோட்டமாக, திருச்சி சிறுகனூர் வெற்றி மாநாட்டில் திருவாரூர் மாவட்டத்திலிருந்து பல்லாயிரக் கணக்கில் பங்கேற்க வேண்டும் என மாவட்ட செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ. அழைப்பு விடுத்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர்தம் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது,

இந்தியாவின் ஏனைய மாநிலங்கள் மட்டுமின்றி, உலக நாடுகளே திரும்பி பார்க்கும் அளவுக்கு அனைத்து தரப்பு மக்களுக்குமான பொற்கால ஆட்சியை தந்துகொண்டிருக்கும் முதல்வர் தளபதி அவர்கள், இந்த சந்ததிகளுக்குமட்டுமின்றி இன்னும் வரப்போகும் சந்ததிகளுக்கும் சேர்த்து தொலைநோக்கு பார்வையோடு திட்டங்களை தந்து அதனை நிறைவேற்றி வருகிறார்.

மக்கள் அனைவருமே ,தங்களுக்கான திட்டங் களை தங்கள் இடத்தில் இருந்து சிந்திக்கும் ஒரு முதல்வராக தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களை கொண்டாடும் நிலையில், வரப்போகும் 2026 தேர்தலிலும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான ஆட்சியை தேர்ந்தெடுக்க தயாராகிவிட்டனர்.

இந்த நிலையில் தமிழ்நாடு முதல்வர், திராவிட நாயகர் கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சீரிய தலைமையில், 2026 -ல் மீண்டும் கழக ஆட்சி என்பதற்கான முன்னோட்ட மாக திருச்சிசிறுகனூரில் கழக வெற்றி முன்னோட்ட மாநாடு இன்று (09.03.2026 திங்கள்) நடைபெறவிருக்கிறது.

10 லட்சம் கழகத்தினர் மற்றும் நிர்வாகிகளை, தமிழ்நாடு முதல்வர், திராவிட நாயகர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சந்திக்கும் “ஸ்டாலின் தொடரட்டும், தமிழ்நாடு வெல்லட்டும்” மாநாட்டில், நமது திருவாரூர் மாவ ட்டத்தில் இருந்து மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள், சார்பு அணிகளின்நிர்வாகிகள், வார்டு மற்றும் கிளைக் கழகம் என எந்த ஒரு நிர்வாகியும் விடுபடாத வகையில் அனைத்து நிர்வாகிகளும், கழக தோழர்களும் சரியான நேரத்தில் தவ றாமல் கலந்து கொண்டு, கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டோடு மாநாட்டில் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் .

இவ்வாறு மாவட்ட மாவட்ட செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தமது அறிக்கையில்குறிப்பிட்டுள்ளார்.



தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட புனித தோமையார் மலை ஒன்றியம், முடிச்சூர் ஊராட்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத்தலைவர் அவர்களின் 73,வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு முடிச்சூர் ஊராட்சி மன்ற உறுப்பினர் க.மணிகண்டன் தலைமையில், தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா.எம்.எல்.ஏ., திராவிட மாடல் அரசின் சாதனைகளை பொதுமக்களுக்கு எடுத்துரைத்து நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் முடிச்சூர் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் அ.விநாயகமூர்த்தி, ஒன்றிய கவுன்சிலர் விசாலட்சி, கிளை செயலாளர்கள் பி.எஸ்.ரமேஷ், சுனில்மேத்யூ, சுகுமார், வி.ஆர்.குமார் ஊராட்சி மன்ற உறுப்பினர் சத்தியா சந்திரன் கழக தோழர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.



செங்கல்பட்டு மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை தொ.மு.ச. சார்பில் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் 73பிறந்த நாள் விழாவினை கூடுவாஞ்சேரியில் உள்ள சங்க அலுவலகத்தில் சு.பத்மநாபன் தலைமையில் பெப்சி கண்ணன், எம்.கே.டி.கார்த்தி தண்டபாணி ஆகியோர் முன்னிலையில் திருமதி. வரலட்சுமி மதுசூதன் எம்.எல்.ஏ. தொ.மு.ச. கொடியேற்றி, நினைவுக் கல்வெட்டினை திறந்து வைத்து, இனிப்புகள் வழங்கி சிறப்புரையாற்றினார்கள். இந்நிகழ்ச்சியில் இரா.பொன்னுராம் சிறப்புரைஆற்றினார்கள். இதில் பி.ராஜா, திருமதி உதயா கருணாகரன், வி.தாமு, எம்.சசிக்குமார் கே.பொன்னம்பலம், என்.கார்த்திக்குமார், டி.தம்பிரான், ராமச்சந்திரன், கண்ணாமணி, பார்த்தீபன், தேவி, மலர்அரசு ஆறுமுகம், திருமதி. மகேஷ்வரி, ஜெயந்தி, பரமேஷ்வரி கௌதம், அன்பரசி திருமதி. டில்லி, திருமகள், கீதா, வேலுஜான்சன், ரேவதி, அனிதா, கார்த்திக்குமார், திருமதி. கலைச்செல்வி இரா.பொன்னுராம் கலந்து கொண்டனர்.